අත්‍යවශ්‍ය සේවා කොමසාරිස් ජනරාල් කාර්යාලය
அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம்
OFFICE OF THE COMMISSIONER GENERAL OF ESSENTIAL SERVICES

2025 டிசம்பர் 06: இரவு 08.30 மணி
கோவை இல: 2025/02

# ஊடக அறிக்கை

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகமானது, நாடு முழுவதும் அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் முறைப்பாடுகள் மற்றும் சிரமங்களை விரைவாகப் புகாரளிப்பதை இலகுபடுத்தும் நோக்குடன், 1904 எனும் அவசர தொலைபேசி இலக்கம் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகிறது.

பின்வரும் விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளைப் புகாரளிக்க பொதுமக்கள் தற்போது 1904 அவசர தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தலாம்:

- மின்சார விநியோகம்
- எரிபொருள் விநியோகம்
- வைத்தியசாலை மற்றும் அவசர மருத்துவ சேவைகள்
- பொதுப் போக்குவரத்து மற்றும் விநியோக சேவைகள்
- நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள்
- உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள்
- தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) சேவைகள்
- அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2464/29 இன் கீழ் அறிவிக்கப்பட்ட நீர்ப்பாசனம் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொதுச் சேவைகள்

அவசர நிலைகள் அல்லது சேவைத் தடங்கல்களின் போது பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் முறைப்பாடுகளுக்கு சரியான நேரத்தில் பதிலளித்தல், சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் வினைத்திறனான தீர்வு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1904 இற்கு வரும் அனைத்து அழைப்புகளும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் செயற்பாட்டு மையத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கு, முறைப்பாடுகள் சரிபார்க்கப்பட்டு, முன்னுரிமை அளிக்கப்பட்டு, துரித நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைசார்ந்த செயற்பாட்டுக் குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

துரித தீர்வுகளை இலகுபடுத்துவதற்காக, இந்த அவசர தொலைபேசி இலக்கத்தை பொறுப்புடன் பயன்படுத்துமாறும் மற்றும் சரியான தகவல்களை வழங்குமாறும் அனைத்து குடிமக்களிடமும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

**பி.கெ.பிரபாத் சந்திரகீர்த்தி**
**அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்**

ඊමේල් ලිපිනය மின்னஞ்சல் Email Address: cg@ocges.gov.lk
අංක 150, ආර්.ඒ. ද මෙල් මාවත, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
எண். 150, ஆர்.ஏ. டி மல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை
No. 150, R.A. De Mal Mawatha, Colombo 03, Sri Lanka